ஏஜீஎல்/சீ/எம்ஏ/02/19/05 2020 யூலை 16

செயலாளர்
மகாவலி கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு,

**கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் சுற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்

எனது அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகரின் மற்றும் கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் முன்னளிக்கப்படும் வகையில் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது பிரதான கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றினை

உருவாக்கிப் பேணிச் செல்லப்படுவதாகப் பிரதான கணக்கீட்டு அலுவலகர் மற்றும் கணக்கீட்டு அலுவலகர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க தொகுதியை பயனுறுதிமிக்கதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைத் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என,

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகளுக்கான அறிக்கை

---

(அ) 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் கடந்த ஆண்டில் இவ்வமைச்சு கமத்தொழில் அமைச்சாகப் பேணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சாக விடயப்பரப்பு வேறுபட்டமையால் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட கீழ்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியின் தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2(அ) | மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 744,166 இற்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அனைத்துப் பொறுப்புக்களையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| 1.6.2(ஆ) | 2017 இன் ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கங்களின் எல்லைகளைத் கடந்து அர்ப்பணிப்புக்கள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ள முடியாதாயினும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பேணப்பட்ட சேமிப்புக்களை விஞ்சியதாக 24 செலவு விடயங்களுக்கான மொத்தம் ரூபா 29,272,839 க்கான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| 1.6.2(இ) | பசளை நிவாரண செலவு விடயத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,449,889,412 தொகையான சேமிப்புக்களை மிகைத்து ரூபா 8,390,327,962 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பொறுப்புக்களுள் பசளை நிவாரணமாகச் செலுத்த வேண்டிய மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான பொறுப்புக்கள் உறுதியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.6 நிதிக்கூற்றுக்கான தொடர்பான கருத்துரைகள்

--------------------------------------------------------------------------------

### 1.6.1 நிதி செயலாற்றுகை கூற்று

------------------------------------------------

#### 1.6.1.1 வருமானம் பெறுகை

-----------------------------------

நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ1(i)) நெல் விற்பனையின் மூலம் பெறவேண்டிய வருமானம் கணக்கிடப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் இந்நிலுவை வருமானத் தொகை ரூபா 511,936,132 ஆக 2020 ஏப்ரல் மாதம் வரையில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### 1.6.1.2 முற்பணக் கொடுப்பனவு

-----------------------------------------

(அ) நி.பி 371(5) இன் பிரகாரம் குறித்த பணிகள் பூரணப்படுத்தப்பட்ட 10 நாட்களில் பெற்ற உப கட்டு நிதியினை மீள திருப்பிச் செல்ல வேண்டுமாயினும் அமைச்சின் 50 அலுவலர்களினால் 105 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 2,212,254 க்கான கட்டுநிதியானது 1 நாள் தொடக்கம் 80 நாட்கள் வரையான காலவீச்சில் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) நி.பி 371(3) இன் பிரகாரம் முறையற்ற பாவனைக்காக உப கட்டுநிதி பெறமுடியாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 11 அலுவலகர்களினால் 14 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 170,059 ஆன உபகட்டுநிதி 1 நாள் தொடக்கம் 6 நாட்கள் வரையான காலப்பகுதியில் தக்க வைக்கப்பட்டிருந்து அந்த முழுத்தொகையும் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது.

**1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

---------------------------------------------------------

**நிதிசாரா சொத்து**

------------------------------

(அ) 2019 ஆம் வருடத்தில் விற்பனை செய்யப்பட்ட அமைச்சிற்கான 14 வாகனங்களின் பெறுமதி நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த கமத்தொழில் அமைச்சின் வீடுகள், உத்தியோகபூர்வ விடுதிகள், வீடுகளற்ற கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள் எனப் பிரிக்கப்பட்டுக் காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கான மீதிகள் வேறுவேறாக அன்றி ரூபா 737,800,000 என மொத்தமாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவிற்கான 25 விடுதி அலுவலகங்கள், 10 உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதி என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிசாரா சொத்துக்களின் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 காசு பாய்ச்சல் கூற்று**

-------------------------------------

**முதலீட்டு செயற்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சல்**

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் அமைச்சின் 14 வாகனங்கள் விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 6,540,930 ஆன வருமானம் முதலீட்டு செயற்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்களின் விற்பனையின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும், அத்தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---------------------------------------------------------------------------------

அமைச்சின் நீர்ப்பாசன பிரிவில் பிணைப் பொறுப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 வருமான முகாமைத்துவம்

------------------------------------------

செலவு விடயம் இல 118-1-10-1-1409 இன் கீழ் நெல் கொள்வனவு செய்வதற்கு கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் ரூபா 3,118,000,000 ஆன மதிப்பிடப்பட்ட ஒதுக்கம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டதுடன் அவற்றுள் 20 மாவட்டச் செயலக அலுவலகங்களுக்காக ரூபா 1,959,912,319 நெல் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் 8 மாவட்டச் செயலக அலுவலகங்களினூடாக 2003.07.00 வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 299,814,540 ஆன வருமானம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அரிசி விற்பனையால் அரசிற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் கணக்கிடப்பட்டு மற்றும் அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 20 மூலதனச் செலவு விடயங்களின் கூட்டுத் தொகையான ரூபா 6,762,400,000 இற்கான ஒதுக்கீடு மற்றும் 08 மீண்டெழும் செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,104,666 இற்கான ஒதுக்கீடு என்பன முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மதிப்பீடு தயாரிக்கும் போது பிழையின்றி கணிப்பிடப்படாமை காரணமாக தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 25 வீதத்திற்கு கூடுதலாக 76 மூலதனச் செலவு விடயங்களும் தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 10 வீதத்திற்கு கூடுதலாக 85 மீண்டெழும் செலவு விடயங்களினதும் ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது. இம்மூலதன மற்றும் மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட

தேறிய ஒதுக்கீடு ரூபா 7,634,792,000 என்பதுடன் அவற்றில் ரூபா 3,314,504,316 அதாவது நூற்றுக்கு 43.41 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 4 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் மேலதிக ஒதுக்கீடு ரூபா 441,167,370 ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அம்மேலதிக ஒதுக்கீடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஆரம்பச் செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது 6 ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்ட 5 செலவு விடயங்களுக்காக உயர் மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் மொத்தம் ரூபா 93,700,000 ஆன ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் நூற்றுக்கு 49 வீதம் அதாவது ரூபா 46,381,000 ஆனது நி.பி 66 இன் படி வேறு செலவு விடயத்திற்காக மாற்றப்பட்டிருந்தது. இந்த 5 செலவு விடயங்களின் ஒட்டுமொத்தச் செலவு நூற்றுக்கு 22 வீதம் ரூபா 20,463,552 என்பதுடன் சேமிப்பு நூற்றுக்கு 27 வீதம் ரூபா 26,858,448 ஆகும். மேற்குறிப்பிட்ட செலவு விடயங்களுக்காக உயர் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நி.பி 66 இன் படி மேலதிக ஒதுக்கீடு வேறு செலவு விடயங்களுக்காகப் பெறப்பட்டதுடன் இச்செலவு விடயத்திற்கான ஒதுக்கீடு நூற்றுக்கு 15 தொடக்கம் நூற்றுக்கு 27 வீதமான அளவில் சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் வருடத்திற்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவுகளில் நூற்றுக்கு 15 வீதம் சேமிப்பாக இனங்காணப்பட வேண்டியதுடன் மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டில் மேலும் நூற்றுக்கு 10 வீதம் கட்டாயமாகச் சேமிக்கப்பட வேண்டுமென்பதாக 2019 செப்டம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் 50 மூலதனச் செலவு விடயங்களுக்கான ரூபா 10,434,782,000 ஆன ஒதுக்கீடு நூற்றுக்கு 25 வீதம் சேமிப்பு ரூபா 2,608,695,500 ஆக இருக்க வேண்டியபோதிலும், ரூபா 949,643,278 ஆனது மட்டுமே சேமிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 118-1-10-1-1409 ஆம் இலக்க நெல் கொள்வனவு செலவு விடயத்திற்காக 6 குறை நிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 3118 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவற்றுள் செலவிடப்பட்டிருந்தது ரூபா 1960 மில்லியன் மட்டுமே

ஆகும். இதன் பிரகாரம் சேமிப்புக்கான சதவீதம் நூற்றுக்கு 37 ஆகும். 2 ஆரம்ப குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் இச்செலவு தீர்க்கப்பட முடியுமாக இருந்த போதிலும் மேலும், 4 குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 118 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

(எ) ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது உயர் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட காரணத்தால் 10 செலவு விடயங்களில் நி.பி 66 இன் கீழ் வேறு செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்தது.

(ஏ) இலக்கம் 118-1-10-14-1409 செலவு விடயத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிராததுடன், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 3,118 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த ரூபா 3,118 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பொறுப்புக்கள் கடன்பாடுகளுக்கு உடன்படல்

---

மீளாய்வாண்டில் அமைச்சின் 28 செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 40,303,499,000 ஆன தேறிய ஒதுக்கத்தில் வருடத்தினுள் ரூபா 38,460,072,632 உபயோகிக்கப்பட்ட பின்னர் சேமிப்பு ரூபா 16,419,167,079 ஆகும். எனினும், அச்சேமிப்பை விஞ்சியதாக ரூபா 23,884,831,921 ஆன பொறுப்புக்களுக்காக உடன்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகத் தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பிரிவு | இடம் மாற்றலாகி வந்த மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 3 மாதத்திற்குள் கையேற்பதற்கோ தீர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அக்காலத்தின் பின்னர் அம்மீதிகள் கணக்கிடப்பட முடியாதெனக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், அமைச்சின் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்திப் பிரிவிலிருந்து வேறு அமைச்சு / திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கு இடமாற்றலாகிச் சென்ற 14 உத்தியோகத்தர்களின் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 153,526 ஆன அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.4 ஆம் பிரிவுகள் | வயது 55 வருடங்களாக முன்னர் கடன் பெற்றவர் இறந்து விட்டால் / வேறு ஏதாவது காரணத்திற்காக அல்லது சேவையிலிருந்து ஓய்வூதியம் பெற்றுச் சென்றிருப்பின் அவ்வாறு ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடன் தொகை மற்றும் வட்டியில் செலுத்தப்படாது மீதியாக இருக்கும் தொகை கடன் பெற்றவரின் மாற்றப்பட்ட ஓய்வூதியப் பணத்திலோ அல்லது பணிக்கொடையிலோ அறவிடப்பட வேண்டுமாயினும் 15 மரணித்த உத்தியோகத்தர்களின் இடர் மற்றும் விழாக்களுக்கான கடன்களுக்காக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 158,464 ஆன கடன் மீதிகள் மற்றும் ஓய்வூதியம் பெற்றுச்சென்ற 5 வருடத்திற்கு மேற்பட்ட 23 உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 266,046 ஆன கடன் மீதுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 128(i)(ஏ) | நிலுவையாக உள்ள வருமானம் தொடர்பாக அறிக்கை தயாரித்தல் மற்றும் அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சின் வாகனங்களுக்கு உரித்தான நாளாந்த ஓட்டக் குறிப்புக்களின் பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்புக்கள் மூலப் பிரதிகளுடன் அந்த மாதங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், அமைச்சின் 98 வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2015 யூலை மாதம் 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவு | அகற்றப்பட வேண்டிய வாகங்களை இனங்காண்பது தொடர்பான தகவல்கள் குறிப்பிட்ட வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னரும் அகற்றுதல் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அது பற்றிய தகவல்களைத் தொடர்புடைய வருடத்தின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னரும் முறையே மாதிரி இலக்கம் 01 மற்றும் மாதிரி இலக்கம் 02 இன் பிரகாரம் உரிய விதத்தில் பூர்த்தி செய்து அரச நிதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம், அரச தொழில் முயற்சிப் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு அனுப்ப வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 2(v) ஆம் பந்தி | வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்த வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக (118-1-1-0-1102) நி.பி 66 இன் கீழ் வேறு 2 செலவு விடயங்களிலிருந்து ரூபா 2,870,000 மேலதிக ஏற்பாடு ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தது. |

## 2.5 முற்பண வழங்கலும் தீர்ப்பனவும்

--------------------------------------------------------

(அ) அமைச்சின் நீர்ப்பாசன, கிராமிய பொருளாதார அலுவல்கள், கடற்றொழில், நீரகவள மூலங்கள் அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் ஆகிய பிரிவுகளில் சேவையாற்றிய சேவையிலிருந்து விலகிச் சென்ற 29 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூபா 793,931 ஆன அறவிட வேண்டிய கடன் மீதிகள் 5 வருட காலத்திற்கு மேற்பட்டவையாக இருப்பதுடன் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 5 வருடத்திற்கு முன்பாக சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மொத்தம் ரூபா 9,348 ஆன இடர், விழா மற்றும் விசேட கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தனிப்பட்ட மீதிகளின் பாகுபடுத்தப்பட்ட பொழிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் இணக்கும் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 415,636 ஆன இனங்காணப்படாத கடன் மீதியொன்று காணப்படுவதுடன் அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

-----------------------------------------------------------------

அமைச்சின் நீர்ப்பாசன பிரிவின் வங்கிக் கணக்கிற்கு உரியதாக வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 46,949 காலம் முடிவுற்ற 17 காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வும் செயலாற்றலும்

--------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறித்துள்ள வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கை மீளாய்வு, நிலைபேறான அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் மேலே 1.1 பந்தியில் காட்டப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

ஆர்.எம்.ரத்னாயக்க
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக